**மினிப்பே பிரதேச சபை - 2024**

--------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மினிப்பே பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மினிப்பே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சூரிய மின் தகடுகளை நிறுவுவதற்காக செலுத்தப்பட்ட ரூபா. 4,888,000 காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்த போதிலும், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கிடப்பட்டதன் காரணமாக, அந்தத் தொகையால் சொத்துக்கள் கூடுதலாக காண்பிக்கப்பட்டுள்ளன. | எதிர்வரும் ஆண்டுகளதில் சீர் செய்து கொள்வதாக. | சரியாக கணக்குகளைத் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மொத்தம் ரூபா.938,415 பெறுமதியான 05 சொத்து விடயங்கள் மற்றும் பொறுப்பு விடயமொன்றிற்குரிய ஆவணங்கள் கோவைகள் மற்றும் உப ஆவணங்கள் | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு விடயங்களையும் உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் மற்றும் துணை ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டும் |

சமர்ப்பிக்கப்படாததால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| (i) | 24 ஆம் பிரிவு | பிரதேச சபைக்குச் சொந்தமான 210 வீதிகளை வர்த்தமானியில் வெளியிட்டு பொருட் பதிவேட்டிற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வீதிகளை வர்த்தமானியில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | வீதிகளை வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். |
| (ii) | 128 ஆம் பிரிவு | சபையால் பொது நடவடிக்கைளுக்கு பயன்படுத்துகின்ற 58 காணித் துண்டுகள் மற்றும் 37 மயானங்களின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் மற்றும் மயானங்களின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | சபைக்குச் சொந்தமான சொத்துக் களின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | |
| | 02(i) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் சனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் சேவைக்கு அறிக்கையிட்டு ரூபா 160,740 ஆன பதில் கடமை சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் சபையின் செயலாளரால் | விசேட பணிகளுக்காக அலுவலகத்திற்கு வரும் அதிகாரிகள், தற்போது நடை முறையில் உள்ள அதே வகையில் செயற்படுத்துகின்ற பதிவுகளை | பொது நிர்வாக சுற்றறிக்கையில் மேவுகை செய்யப்படும் ஒவ்வொரு அரச ஊழியரும் வருகை மற்றும் வெளியேறல் |

| | | |
|---|---|---|
| கைவிரலடையால இயந்திரம் பயன்படுத்தி வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்தாமை அவதானிக்கப்பட்டது. | வைத்திருக்கும் முறையின் கீழ், பதிவேட்டில் வருகை வெளியேறல் பதிவு செய்யப்படுவதாக. | பதிவு செய்வதற்கு கை விரலடையால இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,492,679 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 10,502,728 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,291,992 | 2,438,145 | 2,748,393 | 2,627,196 | 1,335,885 | 1,389,485 | 1,293,683 | 2,937,444 |
| (ii) | வாடகை | 4,771,031 | 5,914,084 | 4,178,125 | 17,753,051 | 4,681,391 | 5,498,461 | 4,178,375 | 16,017,092 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,630,000 | 2,414,095 | 2,167,595 | 455,150 | 1,262,500 | 2,070,175 | 2,118,400 | 208,650 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,982,454 | 25,548,260 | 31,671,652 | 9,095,849 | 7,499,219 | 18,869,569 | 19,583,448 | 15,219,241 |
| | மொத்தம் | 22,675,477 | 36,314,584 | 40,765,765 | 29,931,246 | 14,778,995 | 27,827,690 | 27,173,906 | 34,382,427 |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| **(i) வீதவரி** | | |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு வீதவரி நிலுவை ரூபா 2,599,895 ஆக இருந்தது. அதில் ஒரு அலகு 5,000 இனை மிகைத்த 124 ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,076,255 தொகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 10 அரச நிறுவனங்களிலிருந்து மொத்தம் 284,841 ஆன வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபைக்குரிய 07 பொது வியாபார சந்தைகளின் 47 கடைகளில் இருந்து மொத்தம் ரூபா 16,507,730 ஆன நிலுவை வாடகை காணப்பட்டது. அதில் 01 இற்கும் 05 இடைப்பட்ட காலமாக இடைப்பட்ட காலமாக உள்ள ரூபா தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 6,520,968 ஆக இருந்தது. | ஹசலக நகரின் இரண்டு கடை களுக்காக வாடகை அறவிடப்படுவதுடன் 03 கடைகளுக்காக நீதிமன்ற நடவடிக்கை கள் இடம்பெற்று வருகின்றதுடன் எஞ்சிய 16 கடைகளுக்காக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதாக. | நிலுவை கடை வாடகையை சரியான அறவிடுவதற்கு அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ) ஏனைய வருமானம்** | | |
| **நீர்க் கட்டணங்கள்** | | |
| 01 முதல் 12 ஆண்டுகளுக்கு இடையில் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்ட 27 நீர் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 151,142 ஆன நீர் கட்டணங்கள் அறவிடப்படாதிருந்ததுடன் நீர் பாவனையாளரிடமிருந்து ரூபா 5,000 | ரூபா 5,000 இற்கும் அதிகமான நிலுவை காணப்படும் பாவனையாளர்களின் நீர் இணைப்பினை சிவப்பு அறிவித்தல் | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இற்கும் அதிகமான நிலுவைத் தொகையை வைத்திருந்த 163 நீர் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 1,266,542 மொத்த தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வழங்கி துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | |
| **(ஈ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 2,537,741 தொகையும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 859,050 4,334,340 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்களை அறவிடுவது தொடர்பாக மத்திய மாகாண பிரதான செயலாளருக்கு வேண்டுகோள் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட டீவண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்**

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புறநெகும திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு ரூ.பா 71,949,500 செலவில் கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தின் சாத்திய வள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் 8072 சதுர அடி பரப்பளவில் இரண்டாவது மாடியில் ஒரு நூலகம் மற்றும் மாநாட்டு மண்டபத்தை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதும் 10 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் அந்த மாடியில் வேலைகளை முடித்து தொடர்புடைய வளாகத்தை நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடு களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஆக்கபூர்வமாக திட்ட மொன்றைச் செயற்படுத்த போதுமான நிதி சபையிடம் இல்லாததால் இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்படவில்லை என்பதாக. | நிர்மாணப் வேலைகளை பூர்த்தி செய்து கட்டிடத்தை நோக்கத்திற்குட்ட செயற்பாடுகளுக்காகபயன்ப டுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபையால் நடத்தப்படும் 11 நீர் வழங்கல் திட்டங்களின் நீர் மாதிரிகளை பரிசோதித்து, நீரின் | சபைக்குச் சொந்தமான நீர் வழங்கல் திட்டங்களில் உள்ள நீர் | நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு, அதற்கேற்ப நீரை |

| | | | |
|---|---|---|---|
| | தரத்தை அடையாளம் காணாமல் நுகர்வோருக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டிருந்தது. | சுத்திகரிக்கப்பட்டு, எதிர்காலத்தில் சுத்தமான குடிநீர் விநியோகிக்கப்படும் என்பதாக. | சுத்திகரித்து, மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில், சபை பிரதேசத்தில் 87700 கி.கி உக்கும் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அதில் 79400 கி.கி எந்த முகாமைத்து வமும் இல்லாமல் கழிவுப்பொருள் தொகுதியில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. அதேபோல், இந்த ஆண்டில் சேகரிக்கப்பட்ட 47600 கி.கி உக்காத கழிவுகளும் முகாமை செய்யப்படாமல் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | தற்போது, கழிவுத் தொகுதி முறையாக தயாரிக்கப்பட்டு உக்கும் மற்றும் உக்காத கழிவுகள், கண்ணாடி போன்றவை வேறாக்கப்பட்டு முறையாக தயரிக்கப்பட்டுள்ளதாக. | உக்கும் கழிவுகளை பயன்படுத்தி சேதன உரமாக உற்பத்தி செய்வதற்கும் உக்காத கழிவுப் பொருட்களை மீள்சுழற்சி செய்ய வேண்டும். |

## 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1997 ஆம் ஆண்டில் சபைக்குச் சொந்தமான காணியொன்றில் அத்துமீறி நிர்மாணிக்கப்பட்ட அத்திவாரம் ஒன்றை அப்போதய தலைவரால் உடைத்து அகற்றிய காரணத்தினால் ரூபா 500,000 ஆன நட்டம் ஒன்றை கோரி வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் சபையின் சார்பில் வழக்கிற்காக எந்தவொரு நபரும் தோன்றாமையால் நட்டஈடாக ரூபா 500,000 தொகையும் வழக்கு கட்டணமாக ரூபா 30,500 என மொத்தம் ரூபா 530,500 தொகை கொடுப்பனவு செய்யுமாறு ஒரு தரப்பிலான நீதிமன்ற தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருந்தது. இந்த ரூபா 530,500 ஆன நட்டத்திற்காக நி.பி 104(4) பரிசோதனையின் பிரகாரம் 04 தரப்பினர்களிடமிருந்து ரூபா 134,950 வீதம் அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | ரூபா 530,500 தொகையான நட்டத்திற்காக நி.பி 10(4)4 பரிசோதனையில் 04 தரப்பினர்களிடமிருந்து ரூபா 134,950 வீதம் அறவிடுவதற்கு சட்ட செயற்பாடுகளை எடுப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. . | பரிசோதனை அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 3,216,338 ஆக இருந்ததுடன். அதில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அறவிடப்படாமல் காணப்படும் மீதியின் மொத்தம் ரூபா 1,157,613 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மீதிகள் ரூபா 889,504 ஆக இருந்தது. | அம்மீதிகளை அறவிடுவதற்கு நீதிமன்ற நடைமுறைகள் பின்பற்றப்படும் என்பதாக. | பெறவேண்டிய மீதிகளை அறவிட வேண்டும். |
| (ஆ) | 866 நீர் பாவனையாளர்களுக்கு் நீர்மானி பொருத்தப்படாதிரந்ததுடன் 359 பாவனையாளர்களின் நீர்மானிகள் செயலிழந்திருந்தன. இவ்வாறு நீர்மானி இல்லாத மற்றும் நீர்மானி செயலிழந்து காணப்படும் வீட்டு நீர் பாவனையாளர்களிடமிருந்து ரூபா 500 மற்றும் வியாபார நோக்கிலான பாவனையாளர்களிடமிருந்து ரூபா 750 ஆன நிலையான கட்டணமொன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் புதிய நீர் மானிகளை பொருத்தி கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்காரைமயால சபைக்கு பெறவேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மினிப்பே பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து நீர் பாவனையாளர்களுக்கும் நீர்மானி பொருத்தும் பணி தொடங்கப் பட்டுள்ளதாகவும் மேலும் இந்த ஆண்டு நீர்மானிகளைக் கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டு தற்போது பொருத்தப்பட்டு வருகிறது என்பதாகவும். | நீர்மானி பொருத்தப்பட்டு கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்கரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவிற்கு முரணாக, சபையின் பதில் செயலாளருக்கு பதில் கடமை புரிவதற்காக 2023 திசெம்பர் முதல் 2024 ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் ரூபா 117,600 ஆன இணைந்த படிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் தாபன விதிக் கோவையின 4.4 ஆம் பிரிவிற்கு முரணாக சபையின் அதிகார பிரதேசத்தில் வெளிக்களக் கடமைகளைச் செய்யும் | பதில் கடமை படிகளுக்கு மேலதிகமாக இணைந்த படிகள் கொடுப்பனவு தாபன விதிக் கோவையில் XIV ஆம் அத்தியாயத்தில் 4 ஆவது பிரிவின் பிரகாரம் அவரால் தமது நிரந்தர சேவை நிலையத்திலிருந்து மினிப்பே பிரதேச சபையில் பதில் கடமையை புரிவதற்கு வருகை தரும் போது அச் சேவை நிலையங்கள் இரண்டுக்கு இடையே தூர அளவு 50 கிலோமீட்டரை மிகைத்துள்ளதுடன் ˙ சேவைக்கு | பதில் கடமை சம்பளக் கொடுப்பனவிற்கு மேலதிமாக இணைந்து படிகளை கொடுப்பனவு செய்வதற்கு தாபன விதிக் கோவையில் ஏற்பாடுகள் இல்லாமையால் செலுத்த இணைந்த படிகளை மீள அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சந்தர்ப்பங்களில் 12 மணி நேரத்திற்கும் குறைவான காலத்திற்கு, முழுமையான இணைந்த படிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. | வருகை தந்து நாளாந்த கடமைகளை நிறைவேற்றி மீண்டும் செல்வதற்காக 12 மணித்தியால காலம் மேவுகை செய்யப்பட்டுள்ளதாக. | |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஹசலக்க வாரச் சந்தை காணியில் நபர் ஒருவர் 7 பேர்ச் அளவிலான காணித் துண்டொன்றில் அத்துமீறி பிடித்து குடியிருப்புக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த போதும் அத்துமீறிய குடியிருப்பாளரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஹசலக்க பிரதேச சபைக்கு சொந்தமான ஹசலக்கவில் அமைந்துள்ள வாரச் சந்தை காணியில் அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு வேண்டுகோள் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | சட்ட நடைமுறைகள் எடுக்கப்பட்டு அத்துமீறியவர்கள் அகற்றப்பட வேண்டும். |